(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 183/2009

Deposition of witness for: PW - 8

| | | | |
|---|---|---|---|
| Name | : லதா | Father/Husband Name | : தனசேகரன் |
| Caste | : | Calling | : Doctor |
| Religion | : | Age | : |
| Date | : 03.02.23 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2023.

**முதல் விசாரணை:**

நான் தற்போது சிவகங்கை மருத்துவமனையில் பொது அறுவை சிகிச்சை பிரிவில் இணை பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். கடந்த 28.07.2008ம் தேதி மேலூர் அரசு மருத்துவமனையில் உதவி பேராசிரியையாக பணியாற்றியபோது கொட்டகுடியைச்சேர்ந்த பரமசிவம் மகன் குருமூர்த்தி என்பவர் முகம் தெரிந்த 5 நபர்களால் 27.07.08ம் தேதி மாலை 05 மணியளவில் கொட்டகுடி மந்தையில் வைத்து கடித்ததாக கூறி மதியம் 01 மணியளவில் மேலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தவரை நான் பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருடைய நாடி துடிப்பு சீராக இருந்தது. அவரை நான் பரிசோதித்தபோது அவருக்கு கீழ்க்கண்ட வெளிப்புற காயங்கள் காணப்பட்டன. 1) இடதுபக்க நெஞ்சகத்தின் முன்பக்கத்தில் கடி காயம் காணப்பட்டது. மேலும் அவர் தனது வலதுபக்க தோள்பட்டையில் வலி இருப்பதாகவும் கூறினார். அவரது வலதுபக்க தோள்பட்டை முழுவதுவமாக அசைவுகள் நன்றாக இருந்தது. அவருக்கு நான் முதலுதவி சிகிச்சை அளித்து ஆண்கள் பிரிவில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளித்தேன்.

மேற்படி நபர் முழுவகை சிகிச்சை பெறாமல் மருத்துவரின அனுமதியின்றி உள்நோயாளிகள் பிரிவிலிருந்து 30.07.08ம் தேதியன்று தலைமறைவாகிவிட்டார். **(அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மைகுறித்து கருத்துரை வழங்க இயலவில்லை. நான் வழங்கிய விபத்து பதிவேடு அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

அதே சம்பவத்தில் காயம்பட்டு கொட்டகுடியைச்சேர்ந்த மாயாண்டி மகன் சிவலிங்கம் என்பவர் முகம் தெரிந்த 5 நபர்களால் கொட்டகுடியைச்சேர்ந்த 27.07.08ம் தேதி மாலை 05 மணியளவில் கொட்டகுடி மந்தையில் வைத்து கடித்ததாக கூறி

மதியம் 01 மணியளவில் மேலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தவரை நான் பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருடைய நாடி துடிப்பு சீராக இருந்தது. அவரை நான் பரிசோதித்தபோது அவருக்கு கீழ்க்கண்ட வெளிப்புற காயங்கள் காணப்பட்டன. 1) இடதுபக்க தொடையில் கடி காயம் காணப்பட்டது. அவருக்கு நான் முதலுதவி சிகிச்சை அளித்து ஆண்கள் பிரிவில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளித்தேன்.

மேற்படி நபர் முழுவகை சிகிச்சை பெறாமல் மருத்துவரின அனுமதியின்றி உள்நோயாளிகள் பிரிவிலிருந்து 30.07.08ம் தேதியன்று தலைமறைவாகிவிட்டார். **(அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மைகுறித்து கருத்துரை வழங்க இயலவில்லை. நான் வழங்கிய விபத்து பதிவேடு அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை:**

காயம்பட்ட குருமூர்த்திக்கு காயச்சான்று எதுவும் நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அவருக்கு நெஞ்சில் ஏற்பட்ட காயங்களை நான் பரிசோதனை செய்தபோது அந்த காயத்தை உற்றுநோக்குவதற்கு லென்ஸ் பயன்படுத்தினேனா என்றால் இல்லை. தனக்கு தோள்பட்டையில் வலி இருப்பதாக சொல்லியிருப்பது அது பாசாங்காககூட இருக்கலாம் என்றால் சரிதான். ஒருவருக்கு வலியை துள்ளியமாக கண்டுபிடிப்பதற்கு லோகோமீட்டார் என்ற கருவியும், டோலரி மீட்டர் என்ற கருவியும் இருக்கிறது என்றால் சரிதான், அந்த கருவி மேலூர் அரசு மருத்துவமனையில் இல்லை என்றால் சரிதான். பொதுவாக கூட்டமாக சண்டைபோடும்போது அவர்களுக்குள் எதிர்பாராதவிதமாக கடித்துக்கொண்டால் நான் கூறுவதுபோன்ற காயம் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். நான் பல்மருத்துவர் அல்ல என்றால் சரிதான். இந்த வழக்கில் இந்த வழக்கில காயம் ஏற்பட்ட நபர்களுக்கு ஏற்பட்டுள்ள காயமானது மனித பற்களால் கடிக்கப்பட்டுள்ளதா, மிருகத்தால் கடிக்கப்பட்டுள்ளதா என்பதை கண்டறிய நான் நுண்கதிர் படம் எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் அந்த வேறுபாடுகளை எங்களால் நுண்கதிர் எடுக்காமல் கண்டறியமுடியும்.

நான் இவ்வாறு கூறுவது மருத்துவ நீதிக்கு எதிரானது என்றால் சரியல்ல. ஒரு மனிதனால் கடிக்கப்பட்டதாக சொல்லப்படும் காயமானது எந்த பற்களால் கடித்தால் அவ்வாறான காயம் எற்படும் என்பதை நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் பல் மருத்துவ நிபுணர் கிடையாது. அதேபோல் விபத்து பதிவேட்டில் பற்களால் கடித்ததாக சொல்லப்படும் காயத்தில் காணப்படும் பற்களின் அளவுகளை நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் விபத்து பதிவேட்டில்

குறிப்பிட்டுள்ள காயங்கள் அனைத்தும் மனிதனால் கடித்ததால் ஏற்படக்கூடிய காயம் அல்ல என்றாலும், நாய் போன்ற மிருகங்களால் கடிக்கப்பட்டால்தான் அவ்வாறு காயங்கள் ஏற்படும் என்றாலும் என்னால் கருத்துரை கூற இயலாது, நான் பல் மருத்துவர் அல்ல. இந்த வழக்கில் காயம்பட்டதாக சொல்லப்படும் நபர்கள் இருவரும் தங்களுக்கு ஏற்பட்ட காயம் மிருகங்கள் கடித்ததால் ஏற்பட்டதால் மேற்படி சங்கதி அவர்களை மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பினால் தெரியவந்துவிடும் என்ற காரணத்தினால் எங்கள் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோதே, சிகிச்சையிலிருந்து தலைமறைவாகிவிட்டனர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

காயம்பட்ட நபர்கள் இருவரும் போலீசாரிடம் மருத்துவ நமுனா எதுவும் வாங்கிக்கொண்டு எங்கள் மருத்துவமனையில் வந்து சேரவில்லை என்றால் சரிதான்.